## உடுமலை அருகே வீடு கட்டும்போது கிடைத்த முதுமக்கள் தாழி, எலும்புகள் - தொல்லியல் துறை மூலம் ஆய்வு நடத்த பரிந்துரை



உடுமலை அருகே சோமவாரப்பட்டியில் உடைந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி மற்றும் எலும்புகள்.

**உடுமலை:** உடுமலை அருகே வீடு கட்டுவதற்காக தோண்டிய இடத்தில் பழமைவாய்ந்த முதுமக்கள் தாழி, எலும்புகள் உள்ளிட்ட பெருங்கற்கால சின்னங்கள் கிடைத்துள்ளன.

திருப்பூர் மாவட்டம் உடுமலை அடுத்த சோமவாரப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஐஸ்வர்யம் கார்டன் குடியிருப்பு மனையில், வஞ்சிமுத்து என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில் வீடு கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறார். நேற்று இதற்காக குழி தோண்டியபோது சுமார் 4 அடி உயரமுள்ள முதுமக்கள் தாழி, பழங்காலக் கற்கள், எலும்புகள், பற்களுடன் கூடிய தாடை எலும்புகள் கிடைத்துள்ளன.

தகவலின்பேரில் சென்று பார்வையிட்ட தொல்லியல் ஆர்வலர்கள் கூறும்போது, “வீடு கட்டும் பணியின்போது கண்டறியப்பட்டுள்ள பொருட்கள் பெருங் கற்காலத்தை சேர்ந்தவையாக இருக்கலாம். சுமார் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருக்க வாய்ப்புள்ளது. தொல்லியல் துறையினர் இவற்றை ஆய்வு செய்வதன் மூலம் மேலும் பல உண்மைகள் தெரியவரும்.

அதே பகுதியில் உள்ள கண்டியம்மன் கோயில் பகுதியில் 2012-ல் நடைபெற்ற ஆய்வில் 2,000 ஆண்டுகள் பழமையான சேரர் முத்திரைகள், பிராமி எழுத்துகள் கண்டறியப்பட்டன. பூமிக்கடியில் மேலும் பல வியக்கத்தக்க பொருட்கள் கிடைக்க வாய்ப்புள்ளது” என்றனர்.

EVA STALIN IAS ACADEMY

இதையறிந்த கிராம மக்கள் கூட்டம்கூட்டமாக சென்று அவற்றை ஆச்சர்யத்துடன் பார்த்து வருகின்றனர்.

**ஆட்சியருக்கு பரிந்துரை:** இதுகுறித்து வருவாய் துறையினர் கூறும்போது, ‘‘மேற்படி பகுதியில் தொல்லியல் துறை மூலம் ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதுவரை கட்டுமானப் பணிகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் தொடர்புடைய நிலத்தின் உரிமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது’’ என்றனர்.

## பொன்னேரி அருகே கோயில் குளம் தூர்வாரும்போது ஐம்பொன்னால் ஆன அம்மன் சிலை கண்டெடுப்பு



**பொன்னேரி:** பொன்னேரி அருகே பெரியகரும்பூர் கிராமத்தில் பெருமாள் கோயில் குளம் தூர்வாரும் பணியின்போது ஐம்பொன்னால் ஆன அம்மன் சிலை கண்டெடுக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே பெரியகரும்பூர் கிராமத்தில் உள்ள பெருமாள் கோயில் குளம், கிராம மக்களின் முயற்சியால் தூர்வாரும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இப்பணியில், கடந்த இரு நாட்களுக்கு முன்பு, பொக்லைன் மூலம் குளம் தூர்வாரும் பணி நடந்த போது, சுமார் 2 அடி உயரமுள்ள ஐம்பொன்னால் ஆன அம்மன் சிலை கண்டெடுக்கப்பட்டது. அச்சிலையை கிராம மக்கள், தங்கள் கிராமத்தில் உள்ள பொன்னியம்மன் கோயிலில் வைத்து பூட்டினர்.

இதுகுறித்து தகவல் அறிந்த வருவாய் துறையினரும், போலீஸாரும் நேற்று சிலையை மீட்க பெரியகரும்பூர் கிராமத்துக்கு சென்றனர். கிராம கோயிலுக்கு உண்டான பழங்கால பொன்னியம்மன் ஐம்பொன் சிலை தற்போது கிடைத்திருப்பதாக தெரிவித்து சிலையை அரசிடம் ஒப்படைக்க கிராம மக்கள் மறுத்தனர்.

இதையடுத்து, கோளூர் வருவாய் ஆய்வாளர் கனிமொழி, கும்மிடிப்பூண்டி காவல் ஆய்வாளர் வடிவேல் முருகன் உள்ளிட்டோர் கிராம மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். சுமார் இரண்டு மணி நேரம் நடந்த இந்த பேச்சு வார்த்தைக்குப் பிறகு, ஐம்பொன்னால் ஆன அம்மன் சிலையை கிராம மக்கள் வருவாய்த் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

21 கிலோ எடை கொண்ட அச்சிலையை பொன்னேரி சார் ஆட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ள வருவாய்த் துறையினர், கண்டெடுக்கப்பட்ட சிலை கருவூலத்தில் வைக்கப்படும் எனவும், சிலை எந்த நூற்றாண்டை சேர்ந்தது என்பது உள்ளிட்டவை குறித்து தொல்லியல் துறை மூலம் ஆய்வுக்குட்படுத்தப்படும் எனவும் தெரிவித்தனர்.

## குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்ற நிறுவனங்கள் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும் - முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்

**சென்னை**: குழந்தைத் தொழிலாளர் முறையைமுற்றிலும் அகற்ற, தமிழக அரசுக்கு நிறுவனங்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் தொடர்பாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: துள்ளிக் குதிக்கவும், உலகைப் பார்த்து வியக்கவும், ஒவ்வொன்றையும் துருவித் துருவி

ஆராயவும், அனைவரும் கிடைத்த அரிய பருவமே குழந்தைப் பருவம். திருவள்ளுவர் மழலைகளுக்காக ஓர் அதிகாரத்தையே ஒதுக்கினார்.

குழந்தைகள் விளையாடியும், கலந்துரையாடியும், கதை பேசியும் இருக்க வேண்டிய பருவத்தில், அவர்களைப் பள்ளிகளில் இருந்துப்பிரித்தெடுத்து, பட்டறைகளுக்கு அனுப்புவது மாபெரும் குற்றமாகும்.

குழந்தைகள் பள்ளிகளுக்குப் படிப்பதற்கு மட்டும் செல்வதில்லை. சக குழந்தைகளுடன் பூக்களை ரசிக்கவும், புன்னகைகளைப் படரவிடவும் செல்கின்றனர். கற்றுக்கொள்ள மட்டுமல்ல, உற்றுநோக்கவும் பள்ளிகளே அவர்களுக்கு நாற்றங்கால்களாக இருக்கின்றன.

**வாழ்நாள் பரிசு:** குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் குழந்தைத் தனத்தைத் திருடி, துடிப்புமிக்க அவர்கள் பார்வையைமங்கியதாக மாற்றி, துள்ளுகின்ற அவர்களைத் துவள்கிறவர்களாக்கி, பாடத்தை ஏந்த வேண்டிய அவர்கள் கைகளில், பணிக் கருவிகளைத் தாங்கும் சூழ்நிலையை உருவாக்கி, அவர்கள் சிறகுகளைக் கத்தரித்து, பணியிடம் என்ற சிறையில் அடைப்பது மிகப் பெரிய கொடுமையாகும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றுவதுதான். அவர்களுக்கு அளிக்கப்படுகிற மிகப் பெரிய விடுதலை மட்டுமல்ல, வாழ்நாள் பரிசாகும்.

தமிழ்நாடு அரசு அதை தன் தலையாயக் கடமையாகக் கருதி, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மாபெரும் இயக்கமாக இது ஓங்கி வளர்ந்திருப்பதால், குழந்தைத் தொழிலாளர் முறையைஅகற்றுவதில் தமிழ்நாடு இந்தியாவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 2025-ம் ஆண்டுக்குள் குழந்தைத் தொழிலாளர்இல்லாத தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே அரசின் இலக்கு.

குழந்தைகள் செம்மையாகப் படிக்க, கட்டணமில்லாக் கல்வி, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், அவற்றை வைக்க புத்தகப்பை, சீருடை, பசியின்றிப் படிக்க காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, வசதியாய் நடக்கக் காலணி, அசதியின்றிப் பயணிக்கப் பேருந்து அட்டை, மிதிவண்டி என பல்வேறு உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்குகிறது. படிப்பை சுமையாக இல்லாமல், சுகமாக மாற்றவே இத்தனை நலத் திட்டங்கள்.

தமிழ்நாடு அரசு குழந்தைகளுக்காக திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் அகற்ற நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று விரும்புகிறோம். அரசு சாரா நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் அனைவரும் இணைந்து, குழந்தைத் தொழிலாளர் இல்லாத தமிழ்நாட்டை உருவாக்குவோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின்தெரிவித்துள்ளார்.

## 100 சதவீத தேர்ச்சியே இந்தக் கல்வியாண்டின் இலக்கு: அமைச்சர் அன்பில் மகேஸ்

**சென்னை:** தமிழகப் பள்ளிகளில் 100 சதவீதம் தேர்ச்சியை உறுதி செய்வதே இந்தக் கல்வியாண்டிற்கான இலக்கு என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து 6 முதல் 12-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பள்ளிகள் இன்று (ஜூன் 12) திறக்கப்பட்டன. இந்நிலையில் சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள மகளிர் பள்ளிக்குச் சென்ற பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ், மாணவிகளை பூங்கொத்து, சாக்கலேட் கொடுத்து வரவேற்றார்.பின்னர் மாணவிகளுக்கு புத்தகங்கள், புத்தகப்பை, சீருடை, காலணிகள் ஆகியனவற்றை வழங்கினார்.

EVA STALIN IAS

பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர் அன்பில் மகேஸ் பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளித்துப் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது: இந்த புதிய கல்வியாண்டில் ஆசிரியர்கள், பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் ஓர் இலக்கை நிர்ணயித்து செயல்படுவார்கள். 100 சதவீதம் தேர்ச்சி என்பதே இந்தக் கல்வியாண்டின் இலக்கு. புதிய கல்வியாண்டில் அடியெடுத்துவைக்கும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வாழ்த்துகள்.

பொதுவாகவே பள்ளிகள் ஸ்டாண்டர்ட் ஆப்பரேட்டிங் மெசர்ஸ் என்பவற்றை பின்பற்றுவதை வலியுறுத்துகிறோம், அதன்படி குடிதண்ணீர், கழிவறைகள் தூய்மை, அங்கே தண்ணீர் விநியோகம், வளாகத் தூய்மை, நீர்த்தொட்டிகள் தூய்மை என மாணவர்கள் நலனுக்கான அனைத்தையும் உறுதி செய்யுமாறு வலியுறுத்தியுள்ளோம். மாணவர்களின் நலனே முக்கியம்.

இந்தக் கல்வியாண்டில் ஒன்றாம் வகுப்பிற்கு 1 லட்சத்து 31 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளனர். ஆகஸ்ட் வரை மாணவர் சேர்க்கை அனுமதிக்கப்படும் என்பதால் புதிதாக மாணவர் சேர்க்கை விவரம் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

பஸ் பாஸ் பொருத்தவரை பள்ளிச் சீருடை அணிந்து வந்தாலே இலவசப் பயணத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்பதுதான் நடைமுறை. இருப்பினும் இதுதொடர்பாக போக்குவரத்துத் துறையிடம் பேசுவோம்.
இவ்வாறு அவர் கூறினார்.

## அதிதீவிர புயலாக வலுப்பெற்ற `பிப்பர்ஜாய்': ஜூன் 15-ல் குஜராத்-பாகிஸ்தான் இடையே கரையை கடக்கும்



**சென்னை**: அரபிக் கடலில் நிலவிய 'பிப்பர்ஜாய்' அதிதீவிரப் புயலாக வலுப்பெற்று, வரும் 15-ம் தேதி குஜராத் மாநிலம் மாண்டிவி மற்றும் பாகிஸ்தான் கராச்சி கடற்கரைப் பகுதிகளில் கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பா.செந்தாமரைக்கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய புயல் `பிப்பர்ஜாய்' வடக்கு மற்றும் வடகிழக்கு திசையில் நகர்ந்து, ஜூன் 12ம் தேதி (நேற்று) அதிகாலை அதிதீவிரப் புயலாக வலுப்பெற்று, மும்பையில் இருந்து 560 கி.மீ. தொலைவிலும், குஜராத் மாநிலம் போர்பந்தரில் இருந்து 460கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டுள்ளது.

இது மேலும் வலுப்பெற்று வரும் 14-ம் தேதி வடக்கு திசையிலும், பின்னர் வடகிழக்கு திசையிலும் நகர்ந்து சவுராஷ்டிரா- ட்ச்வளைகுடா மற்றும் அதையொட்டிய பாகிஸ்தான் கடற்கரைப் பகுதிகளில் வரும் 15-ம் தேதி காலை

EMY

11.30 முதல், பிற்பகல் 2.30 மணியளவில் மிக தீவிரப் புயலாக மாறி, குஜராத் மாநிலம் மாண்டிவி, பாகிஸ்தான் கராச்சி கடற்கரைப் பகுதிகளைக் கடக்கும். அப்போது காற்றின் வேகம் மணிக்கு 135 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 150 கி.மீ. வேகத்திலும் இருக்கக்கூடும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் தென்மேற்குப் பருவமழை பரவியுள்ளது. மேற்கு திசைக் காற்று மற்றும் வெப்பச் சலனம் காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் இன்று முதல் வரும் 14-ம் தேதி வரை சில இடங்களிலும், 16-ம் தேதி ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரி முதல் 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவில் இருக்கக்கூடும். சில இடங்களில் வழக்கத்தைவிட 7 டிகிரிஃபாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானதுமுதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜூன் 11-ம் தேதி (நேற்று) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவானமழை அளவுகளின்படி அதிகபட்சமாக காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் 5 செ.மீ., சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், காரைக்குடி, திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை, செம்பரம்பாக்கம், ஆகிய இடங்களில் தலா 3செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

குமரிக்கடல், மன்னார் வளைகுடா, தென் தமிழக கடலோரப் பகுதிகளில் வரும் 14-ம் தேதி வரை மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக் காற்று வீசக்கூடும். எனவே, அப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஐக்கிய அரபு அமீரகம் 2022-23-ல் ரூ.27,500 கோடி முதலீட்டுடன் இந்தியாவில் 4-வது இடம்



**புதுடெல்லி**: ஐக்கிய அரபு அமீரகத்துடன் இந்தியா கடந்த ஆண்டு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டது. இதையடுத்து இந்தியாவில் அதிக அளவில் முதலீடு செய்யும் நாடுகளின் பட்டியலில் ஐக்கிய அரபு அமீரகம் நான்காம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

2021-22 நிதி ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவில் 1 பில்லியன் டாலர் (ரூ.8,200 கோடி) முதலீடு செய்திருந்தது. கடந்த ஆண்டு மே மாதம் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செயல்பாட்டு வந்தது. இதையடுத்து 2022-23 நிதி ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தின் முதலீடு 3.35 பில்லியன் டாலராக (ரூ.27,500 கோடி) உயர்ந்துள்ளது. 2021-22 நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது மூன்று மடங்கு அதிகம் ஆகும்.

இந்தியாவில் முதலீடு செய்யும் நாடுகளின் வரிசையில் 2021-22 நிதி ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகம் 7-வது இடத்தில் இருந்தது. இந்நிலையில், தற்போது அது 4-வது இடத்துக்கு முன்னேறிஉள்ளது.

இந்தப் பட்டியலில் 17.2 பில்லியன் டாலர் (ரூ.1.41 லட்சம் கோடி) முதலீட்டைக் கொண்டு சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது. 6.1 பில்லியன் டாலர் (ரூ.50,000 கோடி) முதலீட்டைக் கொண்டு மொரிஷியஸ் 2-வது இடத்திலும், 6 பில்லியன் டாலர் (ரூ.49,000 கோடி) முதலீட்டைக் கொண்டு அமெரிக்கா 3-வது இடத்திலும் உள்ளன.

சேவை, கடல்சார் போக்குவரத்து, மின் உற்பத்தி மற்றும் கட்டுமானத் துறைகளில் ஐக்கிய அரபு அமீரகம் இந்தியாவில் அதிக அளவில் முதலீடு செய்துஉள்ளது.

## இந்தியாவில் 10.1 கோடி பேர் நீரிழிவு நோயால் பாதிப்பு - மருத்துவ ஆய்வில் தகவல்



**புதுடெல்லி**: நீரிழிவு நோயாளிகள் குறித்த ஆய்வு ஒன்றை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகமும் இணைந்து நடத்தின.

நாடு முழுவதும் 1 லட்சத்து 13 ஆயிரத்து 43 பேரிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் உலகப் புகழ்பெற்ற லான்செட் மருத்துவ இதழில் வெளியாகியுள்ளது. இதில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் நீரிழிவு நோயாளிகள் 10 கோடியே 10 லட்சம் பேர் உள்ளனர். 13 கோடியே 60 லட்சம் பேர் நீரிழிவுக்கு முந்தைய நிலையில் உள்ளனர். இது நாட்டின் மக்கள்தொகையில் 11.4 சதவீதம் பேருக்கு வளர்ச்சிதை மாற்றம் பிரச்சினை உள்ளதை காட்டுகிறது.

கோவா மாநிலத்தில் மிக அதிகமாக 26.4 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோய் உள்ளது. ஆனால் மக்கள்தொகை அதிகம் உள்ள உத்தரபிரதேசத்தில் 4.8 சதவீதம் பேருக்கு மட்டுமே நீரிழிவு பிரச்சினை

உள்ளது. நகர்ப்புறங்களில் வசிப்போருக்கு வளர்சிதை மாற்ற பிரச்சினைகள் அதிகளவில் உள்ளது. நாடு முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வில் 31.5 கோடி பேருக்கு அதிகரத்தழுத்த பிரச்சினை உள்ளன.

25.4 கோடி பேருக்கு உடல் பருமன் பிரச்சினை உள்ளது. 35.1 கோடி பேருக்கு தொந்தி பிரச்சினை உள்ளது. 21.3 கோடி பேருக்கு கொழுப்பு சத்து அதிகம் உள்ளது. தொற்றாத நோய்களின் வளர்சிதை மாற்றத்தால், இந்திய மக்கள் தொகையில் பெரும்பாலானோருக்கு நீண்ட கால இதயப் பிரச்சினை மற்றும் உடல் உறுப்பு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**WTC Final | நேதன் லயன், போலண்ட் அபார பந்துவீச்சு - இந்தியா தோல்வி அடைந்தது எப்படி?**




உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் இந்திய அணியை வீழ்த்திய மகிழ்ச்சியில் ஆஸ்திரேலிய அணியினர். படம்: ஏஎப்பி

**லண்டன்**: உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 209 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வென்றது. இதையடுத்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கான தண்டாயுதத்தை ஆஸ்திரேலிய அணி கைப்பற்றியது.

இந்திய, ஆஸ்திரேலிய அணிகள் மோதிய உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் கடந்த 7-ம் தேதி தொடங்கியது.

முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 469 ரன்களும், இந்தியா 296 ரன்களும் எடுத்தன. முதல் இன்னிங்ஸில் 173 ரன்கள் முன்னிலை பெற்ற ஆஸ்திரேலிய அணி, 2-வது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடியது. 8 விக்கெட் இழப்புக்கு 270 ரன்கள் எடுத்த நிலையில் ஆஸ்திரேலிய அணி டிக்ளேர் செய்தது. இதன்மூலம் இந்திய அணி வெற்றி பெற 444 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 2-வது இன்னிங்ஸை விளையாடிய இந்திய அணி 4-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 164 ரன்களை எடுத்திருந்தது.

இறுதி நாள் ஆட்டத்தில் 280 ரன்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில் இந்திய அணியின் விராட் கோலி 44 ரன்களுடனும், அஜிங்கிய ரஹானே 20 ரன்களுடன் நேற்று களமிறங்கினர்.

இருவரும் நிதானத்துடன் விளையாடியபோதும் ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்களின் பந்தில் அனல் பறந்தது. 49 ரன்களை எடுத்த நிலையில் அரை சதம் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட விராட் கோலி ஆட்டமிழந்தார்.

போலண்ட் வீசிய பந்தை அடித்து ஆட முயன்றபோது ஸ்டீவ் ஸ்மித் பாய்ந்து சென்று கேட்ச் செய்தார். இதுவே ஆட்டத்தின் திருப்புமுனையாக மாறியது. இதைத் தொடர்ந்து அதே ஓவரிலேயே ரவீந்திர ஜடேஜா ரன் கணக்கைத் தொடங்காமலேயே போலண்ட் பந்தில் ஆட்டமிழந்தார். இதனால் 5 விக்கெட் இழப்புக்கு 184 ரன்கள் என்ற மோசமான நிலைக்கு இந்திய அணி தள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து 6-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த விக்கெட் கீப்பர் கே.எஸ். பரத்தும், ரஹானேவும் இன்னிங்ஸை கட்டமைக்க முயன்றனர். ஆனால் துரதிருஷ்டவசமாக ரஹானே ஆட்டமிழந்தார். அவர் 46 ரன்கள் எடுத்திருந்தபோது

ஸ்டார்க் பந்துவீச்சில், விக்கெட் கீப்பர் அலெக்ஸ் கேரியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதைத் தொடர்ந்து கே.எஸ்.பரத் 23, ஷர்துல் தாக்குர் 0, உமேஷ் யாதவ் 1, மொகமது சிராஜ் 1 ரன்னில் ஆட்டமிழந்தனர். மொகமது ஷமி 13 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். 63.3 ஓவர்களில் 234 ரன்களுக்கு இந்திய அணியின் 2-வது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

இதையடுத்து 209 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா, உலக டெஸ்ட்சாம்பியன்ஷிப்பை வென்றது. ஆஸ்திரேலிய அணி தரப்பில் நேதன் லயன் 4 விக்கெட்களையும், ஸ்காட் போலந்த் 3 விக்கெட்களையும் சாய்த்தனர். மிட்செல் ஸ்டார்க் 2, பேட் கம்மின்ஸ் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் அபாரமாக ஆடி சதமடித்த டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

போட்டியில் வென்றதையடுத்து ரூ.13 கோடி பரிசுத்தொகையுடன் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கான தண்டாயுதம், ஆஸ்திரேலிய அணியிடம் வழங்கப்பட்டது. 2-வது இடம் பிடித்த இந்திய அணிக்கு ரூ.6.5 கோடி பரிசாக அளிக்கப்பட்டது.

**தொடரும் சோகம்:** டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்தியா 2-வது முறையாக தகுதி பெற்ற இந்தியா இந்த முறையும் தோல்வி கண்டது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில்நியூஸிலாந்திடம் இந்தியா தோல்வி கண்டிருந்தது.

**5 ஆயிரம் ரன்கள்:** ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கிரிக்கெட் விளையாட்டின் 3 வடிவங்களிலும் (டெஸ்ட், ஒருநாள், டி20) 5 ஆயிரம் ரன்கள் குவித்தவர் என்ற சாதனையை இந்திய வீரர் விராட் கோலி செய்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 93 போட்டிகளில் விளையாடியுள்ள விராட் கோலி, மொத்தம் 5,003

ரன்களை விராட் கோலி எடுத்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ரன்கள் குவித்தவர்கள் (அனைத்து வடிவங்களிலும்) வரிசையில் சச்சின் டெண்டுல்கர் முதலிடத்தில் உள்ளார். அவர் 110 போட்டிகளில் 6,707 ரன்களைச் சேர்த்துள்ளார். மேலும் டெஸ்ட் போட்டிகளில் மட்டும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விராட் கோலி 2,037 ரன்களைச் சேர்த்துள்ளார்.

**மோசமான சாதனை:** டெஸ்ட் போட்டிகளில் டாஸில் வெற்றி பெற்று பந்துவீச்சைத் தேர்வு செய்து அதிகமான தோல்விகளைப் பெற்ற அணியாக இந்தியா உள்ளது. இதுவரை 58 டெஸ்ட்களில் டாஸில் வெற்றி பெற்ற இந்திய அணி பந்துவீச்சைத் தேர்வு செய்து 9 வெற்றி, 21 தோல்வி, 28 டிராக்களை பெற்றுள்ளது.

**அனைத்து பட்டங்களையும் கைப்பற்றிய ஆஸி.:** உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றதன் மூலம் ஐசிசி நடத்தும் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் சாம்பியன் பட்டம் வென்ற முதல் அணி என்ற வரலாற்று சாதனையை ஆஸ்திரேலியா அணி படைத்துள்ளது. ஐசிசி 50 ஓவர் உலகக் கோப்பை (1987, 1999, 2003, 2007, 2015), டி20 உலக கோப்பை (2021), சாம்பியன்ஸ் டிராபி (2006, 2009) மற்றும் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் (2021-23) ஆகிய பட்டங்களை ஆஸ்திரேலிய அணி வென்றுள்ளது.

> இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஆஸி. வீரர் ஸ்காட் போலண்ட் 33 விக்கெட்களை வேட்டையாடி உள்ளார்.

> இங்கிலாந்தில் மட்டும் 50 அல்லது அதற்கும் அதிகமான விக்கெட்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் ஆஸ்திரேலிய வீரர் நேதன் லயன் இடம்பிடித்துள்ளார். இந்த வரிசையில் ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வார்ன் (129 விக்கெட்கள்) முதலிடத்தில் உள்ளார். அதற்கடுத்த இடங்களில் ஆஸ்திரேலியாவின் கிளாரி கிரிம்மெட் (67 விக்கெட்கள்), ஹுக் டிரம்பிள் (67 விக்கெட்கள்), மேற்கிந்தியத் தீவுகள் அணியின் லான்ஸ் கிப்ஸ் (62 விக்கெட்கள்),

ஆஸ்திரேலியாவின் பில் ஓ ரீலி (50) விக்கெட்கள்) உள்ளனர். 6-வது இடத்தில் லயன் உள்ளார்.

> டிராவிஸ் ஹெட், ஸ்மித் ஆகியோர் அபாரமாக பேட்டிங் செய்து எங்களது வெற்றியை சுலபமாக்கிவிட்டனர்.போட்டி முழுக்க நாங்கள் ஆதிக்கம் செலுத்தினோம். ஸ்காட் போலண்ட், நேதன் லயன் ஆகியோர் சிறப்பாக பந்துவீசினர். அணியில் இடம்பெற்ற அனைவரும் தங்களது பங்களிப்பை சிறப்பாகச் செய்தனர். - பேட் கம்மின்ஸ், ஆஸி. அணியின் கேப்டன்.

> உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டியில் ஆஸ்திரேலிய வீரர்கள் சிறப்பாக பேட்டிங் செய்தனர். டிராவிஸ் ஹெட், ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் அபாரமாக விளையாடி எங்களது வெற்றியைப் பறித்துவிட்டனர். உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் 2 முறை விளையாடியதே சாதனைதான். - ரோஹித் சர்மா, இந்திய கிரிக்கெட் அணி கேப்டன்.

## ஹாக்கி | இந்திய ஆடவர், மகளிர் அணிகள் ஜூனியர் உலகக் கோப்பைக்கு தகுதி




ஜூனியர் ஆசியக் கோப்பை போட்டியில் சாம்பியன் பட்டம் வென்று மகிழ்ச்சியில் திளைக்கும் இந்திய வீராங்கனைகள்.

**ககாமிகஹாரா**: ஜூனியர் ஆசியக் கோப்பை ஹாக்கி தொடரில் இந்திய மகளிர் அணியினர் முதன்முறையாக சாம்பியன் பட்டம் வென்று கோப்பையைக் கைப்பற்றியுள்ளனர்.

ஜப்பானின் ககாமிகஹாரா நகரில் நடைபெற்று வரும் மகளிர் ஜூனியர் ஆசியக் கோப்பை ஹாக்கி தொடரில் நேற்று இறுதி ஆட்டம் நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் இந்திய அணியும், தென் கொரிய அணியும் மோதின. இதில் சிறப்பாக விளையாடிய இந்திய மகளிர் அணியினர் 2-1 என்ற கோல் கணக்கில் 4 முறை சாம்பியன் பட்டம் வென்ற தென் கொரிய மகளிர் அணியை வீழ்த்தினர்.

இதன்மூலம் முதல்முறையாக இந்திய மகளிர் அணியினர் ஆசியக் கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளனர்.

இந்திய அணிக்காக 22-வது நிமிடத்தில் அன்னுவும், 41-வது நிமிடத்தில் நீலமும் கோல் அடித்து அணிக்கு கோப்பையைப் பெற்றுத் தந்தனர்.

இந்த தொடரில் இதற்கு முன் இந்திய அணி 4 வெண்கலப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளது. மேலும் கடந்த 2016-ம் ஆண்டு ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி தொடரில் இறுதிப் போட்டி வரை சென்று தோல்வி அடைந்த நிலையில், தற்போது முதல்முறையாக இந்திய மகளிர் அணியினர் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்புநடைபெற்ற ஆடவர் ஜூனியர் ஹாக்கி போட்டியில் இந்திய ஆடவர் அணி தங்கம் வென்றிருந்த நிலையில், தற்போது மகளிர் அணியும் கோப்பையைக் கைப்பற்றியுள்ளனர். இதன் மூலம், 2 ஜூனியர் அணிகளும் இந்த ஆண்டு நவம்பர் 29 முதல் சிலி நாட்டில் நடைபெறும் ஜூனியர் உலகக் கோப்பையில் விளையாடுவதற்கு தகுதி பெற்றுள்ளன.

## பிரெஞ்ச் ஓபன் | 23வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று வரலாறு படைத்தார் ஜோகோவிச்




**பாரீஸ்**: பிரெஞ்ச் ஓபன் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் நார்வே வீரர் காஸ்பர் ரூட்டை வீழ்த்தியதைத் தொடர்ந்து, டென்னிஸ் சகாப்தத்தில் 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற முதல் வீரர் என்ற வரலாற்றை படைத்தார்.

காஸ்பர் ரூட்டை 7-6 (7-1), 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார். 34வது முறையாக கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டியில் விளையாடிய ஜோகோவிச் பெறும் 23வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் இதுவாகும். முன்னதாக, ஆடவர் ஒற்றையர் டென்னிஸில் ரஃபேல் நடால் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை பெற்றதே சாதனையாக இருந்தது. அதனை ஜோகோவிச் இன்று முந்தினார். ஒவ்வொரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களையும் குறைந்தது மூன்று முறை வென்ற முதல் வீரர் என்ற பெருமையையும் ஜோகோவிச் படைத்தார்.

இதில் இன்னொரு ஆச்சரியமாக, ஜோகோவிச் வென்ற 23 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் 10க்கும் மேற்பட்டவை அவர் 30 வயதுக்குமேல் வென்றவை.

## El Nino 2023 | ‘எல் நினோ’ தாக்கம் - உலகின் எந்தெந்த நாடுகள் பாதிக்க வாய்ப்பு?



வானிலை ஆராய்ச்சியாளர்கள், சூழலியல் ஆர்வலர்கள், உலக நாடுகள் என பல தரப்பிலும் இப்போதைய பேசுபொருள் ’எல் நினோ’ என்ற காலநிலை நிகழ்வு. இந்நிகழ்வு சராசரியாக 5 முதல் 7 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் எனக் கூறப்படும் நிலையில், இந்த ஆண்டு (2023) எல் நினோ ஆண்டு என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்த எல் நினோ நிகழ்வால் உலகம் முழுவதும் பரவலாக ஆண்டின் பிற்பகுதியில் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க தேசிய கடல்சார் மற்றும் வானிலை ஆராய்ச்சி அமைப்பான (US National Oceanic and Atmospheric Administration - **NOAA**) தெரிவித்துள்ளது. பொதுவாகக் குறிப்பிட வேண்டுமென்றால் அதீத மழை, திடீர் புயல், மிதமிஞ்சிய வறட்சி போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

**எல் நினோ என்றால் என்ன? -** எல் நினோ என்பது உலகம் முழுவதும் பரவலாக பல்வேறு பகுதிகளிலும் வெப்பநிலையை உயரச் செய்யும் ஒரு வகை காலநிலை நிகழ்வு. பசிபிக் கடல் பரப்பில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்புதான் 'எல் நினோ' என்று விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர். பசிபிக் கடல்பரப்பு

வெப்பநிலையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அதாவது, 7 முதல் 24 மாதங்கள் வரை அதிகமாக்கும் நிகழ்வு இது.

இந்த எல் நினோ எவ்வளவு வலிமையானதாக இருக்கிறது என்பதைப் பொறுத்துதான் அதீத மழை பெய்வதோ அல்லது கடுமையான வறட்சி ஏற்படுவதோ நிர்ணயமாகும். பருவம் தப்பிய மழையும் கேடு, பருவம் தவறிய வெப்பமும் கேடு. இவை இரண்டுமே மக்கள் மீது பொருளாதாரம் மீது பாதிப்பினை ஏற்படுத்தும். அதனால்தான் உலகக் கவனம் முழுவதும் இந்த காலநிலை நிகழ்வு மீது குவிந்திருக்கிறது.

இந்நிலையில், என்ஓஏஏ-வின் விஞ்ஞானி மிச்செல் எல் ஹூரெக்ஸ் வியாழக்கிழமை ஓர் அறிக்கையை அதன் இணையதளத்தில் வெளியிட்டார். அதில் அவர், ”எல் நினோவால், உலகளவில் எந்தெந்தப் பகுதிகளில் தற்போது வழக்கத்துக்கு மாறான அதீத வெப்பநிலை நிலவுகிறதோ அந்தந்தப் பகுதிகளில் இன்னும் வெப்பநிலை அதிகரிக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் ஆஸ்திரேலிய அரசு இவ்வாரத் துவக்கத்தில் வெளியிட்ட அறிவிப்பில், எல் நினோவால் நாட்டில் வறட்சியான நாட்கள் அதிகமாக இருக்கும். வெப்பமும் சற்று அதிகமாகக் காணப்படும் என்று தெரிவித்துள்ளது. ஜப்பான் நாடோ கடுமையான காட்டுத்தீ ஏற்படலாம் என்று கணித்துள்ளது. ஜப்பானில் இந்த ஆண்டு வசந்த காலம் வழக்கத்தைவிட வெப்பம் நிறைந்ததாக இருந்ததற்கு எல் நினோ நிகழ்வே காரணமாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளது.

அமெரிக்காவில் கோடையிலேயே எல் நினோ தன் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது சற்று தள்ளிப்போனது. வசந்த கால பிற்பகுதியில் கொஞ்சம் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் குளிர்காலம் நெருங்கும்போது எல் நினோவின் விளைவு கடுமையாகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்காவின் சில பகுதிகளில் குறிப்பாக தெற்கு கலிபோர்னியாவிலிருந்து மெக்சிகோ வளைகுடா வரை வழக்கத்தைவிட

சற்று அதிகமான குளிரும், வடமேற்கு பசிபிக்கிலிருந்து ஓஹியோ பள்ளத்தாக்கு வரை வழக்கத்துக்கு மாறான வறட்சியும் நிலவும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல் நாட்டின் வடக்கு மாகாணங்களில் வழக்கத்துக்கு மாறான அளவில் வெப்பம் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3 ட்ரில்லியன் அளவில் இழப்பு:** இந்த ஆண்டு எல் நினோ விளைவால் சர்வதேச அளவில் 3 ட்ரில்லியன் அளவுக்கு பொருளாதார இழப்புகள் ஏற்படலாம் என்று ஓர் அறிவியல் இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் கணிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு, தொழில்கள் நலிந்து, நோய்கள் மலிந்து இந்த பொருளாதார தேக்கம் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

அதனால் பெரு போன்ற தென் அமெரிக்க கண்ட நாடுகள் எல் நினோ விளைவை எதிர்கொள்ள 1.06 பில்லியன் டாலர் நிதியை ஒதுக்கீடு செய்து வைத்துள்ளது. புயல்களால் அதிக பாதிப்புகளை சந்திக்கும் பிலிப்பைன்ஸ் நாடும் அரசாங்க சிறப்புக் குழுவை அமைத்து இப்போதிருந்தே பாதிப்புகளைக் கணிக்கவும், விளைவுகளை சமாளிக்கவும் திட்டங்களை தீட்ட முனைப்பு காட்டி வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை எல் நினோ பாதிப்பு அதன் தாக்கத்தை ஏற்படுத்த 70 சதவீதம் வாய்ப்புகள் இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம், வேளாண் ஆராய்ச்சிக் கழகங்கள் ஆகியன இணைந்து தற்போதிருந்தே இந்தத் தாக்கத்தை எப்படி சமாளிப்பது என்பது தொடர்பாக ஆலோசனைகளைத் தொடங்கியுள்ளனர்.

எல் நினோவின் தாக்கம் ஜூலை 2023 முதல் இந்தியாவைப் பாதிக்கத் தொடங்கும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர். மேலும், இந்தியாவில் இதுவரை 'லா நினா' காலநிலை நிகழ்வு நீடித்து வந்ததால், அதன் பின்னர் வரும் 'எல் நினோ' ஆண்டில் பருவமழை பற்றாக்குறைக்கான சூழலை உருவாக்கலாம் என்று அச்சம் தெரிவித்துள்ளனர்.

EVA STALIN IAS ACADEMY